# எல்லை நிர்ணய ஆணைக்குழு
# 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை
# 2020 சனவரி 01 முதல் 2020 மார்ச் 31 வரை

## 1.0 பின்னணி

எல்லை நிர்ணய ஆணைக்குழு 2015.11.13 ஆம் தேதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ மற்றும் 95(1) ஆகிய உறுப்புரைகளுக்கமைய தாபிக்கப்பட்டது, அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் நியமனம் செய்யப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பதவிக்காலம் 2018,11,13 ஆம் தேதி முடிவடைந்தமையால் அன்றிலிருந்து மூன்று வருட காலத்திற்கு ஆணைக்குழுவின் தவிசாளராக கலாநிதி தவலிங்கம் அவர்களும் அங்கத்தவர் ஒருவராக கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க அவர்களும் மீண்டும் நியமனம் செய்யப்பட்டதோடு, 2018.08.24 ஆம் தேதி நிகழ்ந்த பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாவின் மரணம் காரணமாக ஏற்பட்டிருந்த அங்கத்தவர் வெற்றிடத்திற்கு 2019.03.11ஆம் தேதி திரு.ஏ.எம். நஹியா நியமனம் செய்யப்பட்டார்.

அரசியலமைப்பின் 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைககளினால் ஆணைக்குழுவின் பிரதான பணிகள் விளக்கப்பட்டுள்ளன. எது எவ்வாறாயினும் ஏனைய ஆணைக்குழுக்கள் தொடர்பாக போன்றன்றி எல்லை நிர்ணய ஆணைக்குழு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அரசியலமைப்பில் அல்லது பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்தில் குறிப்பிடப்படவில்லை.

- ஆணைக்குழுவின் பணிகள்
- ஆணைக்குழுவின் தத்துவங்கள்

ஆரம்பத்தில் அரசியலமைப்பு சபையினால் உணர்த்தப்பட்ட கருத்து யாதெனில், புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுகின்ற பொழுது, தனியான எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றை நிறுவுவதும் அதன் பணிப் பொறுப்புக்களை விளக்குகின்ற போது அனைத்து புவியியல் எல்லை வரையறைகளையும் நிர்ணயிப்பதை விதிமுறைகளுக்கமைய மேற்கொள்வதுமே என்பதாகும்.

.

**2.0 நோக்கு:-** நெறிமுறையானதும் நீதியானதுமான கோட்பாடுகளின் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்யத்தகு உயர் நிலையை அடையப் பெறல்.

**பணிக்கூற்று-:** அரசியலமைப்பின் மூலம் அதிகாரம் கிடைக்கப் பெற்றுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையுடனும், வினைத்திறனுடனும், வெளிப்படைத் தன்மையுடனும், நம்பத்தகுந்த முறையிலும், சட்டத்திற்கிணங்கவும் எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ளல்.

### நோக்கங்கள்

- ஒவ்வொரு வாக்காளருக்கும் அல்லது பிரசைக்கும் உயர் மட்டத்திலான சமத்துவ பிரதிநிதித்துவம் கிடைக்கத் தக்க விதத்திலும் மக்களின் சனநாயக உரிமைகள் மற்றும் அதற்கான சூழ்நிலை என்பவற்றை பாதுகாக்கத்தக்க விதத்திலும் வினைத்திறனை

உறுதிப்படுத்துவதற்கான தேர்தல் தொகுதிகள் மற்றும் ஏனைய நிர்வாக அலகுகளை எல்லை நிர்ணயம் செய்தல்

- தேர்தல் தொகுதிகள் அல்லது நிர்வாகப் பிரதேசங்கள் அல்லது கல்வி, சுகாதார அல்லது பாதுகாப்பு போன்ற சமூக - பொருளாதார சேவைகளுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காக கையளிக்கப்படுகின்ற எல்லை நிர்ணயப் பணிகளை உரிய கால அட்டவணைக்குள் பூர்த்தி செய்தல்.

- அரசாங்கத்திற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் தமது தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான எல்லை நிர்ணயங்களின் போது உரிய அறிவையும் தகவல்களையும் வழங்குதல்.

- எல்லை நிர்ணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் உரிய ஆவணங்களை ஒன்று திரட்டுகின்ற ஒரு மத்திய நிலையத்தை உருவாக்குதல்.

.

## 3.0 கொள்கையளவிலான விடயங்கள்

### 3.1 அமுலாக்கல் திட்டம்

2019 ஆம் ஆண்டிற்குள் எதிர்பார்க்கப்பட்ட அரசியலமைப்புத் திருத்தம் நிகழவில்லை. ஆதலால் அமுலாக்கல் திட்டத்தை தயாரிக்கின்ற போது, சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் கீழ்வரும் செயலாற்றங்களை உள்ளடக்கிய வகையில் 2020 ஆம் ஆண்டின் அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்பட்டது ( பின்னிணைப்பு 1)

1. திட்டமிடலும் பயிற்சியும்

2. தகவல்களை ஒன்று திரட்டல்.(நிருவாக அலகுகள் மற்றும் உள்ளூர் அதிகார நிறுவனங்கள் என்பவற்றை நிறுவுவதோடு தொடர்புடைய அனைத்து வர்த்தமானி அறிவித்தல்களையும் ஒன்று திரட்டத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன)

3. இலங்கையின் நிகழ்கால சனத்தொகை மற்றும் காணிகள் தொடர்பான முந்துரிமையை அடிப்படையாக கொண்டு கடந்த பாராளுமன்றத் தேர்தல்களோடு தொடர்புடைய எல்லை நிர்ணய அறிக்கைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

4. நிருவாக அலகுகளின் எல்லைகள் தொடர்பான ஆராய்ச்சி

5. உள்ளூர் அதிகார சபைகளின் எல்லை நிர்ணயம் தொடர்பான ஆராய்ச்சி

6. நிகழ்காலத்துக்கு பொருந்தக்கூடிய அறிக்கைகள் / சுவடிக் கூடமொன்றை தயார்படுத்தலும், ஆவணங்களின் மென்பிரதிகளை தயார்படுத்தலும்.

### 3.2 மாகாண சபைகளுக்கான தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்தல்

2017 ஆம் ஆண்டின் மாகாண சபை தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் 2017.09.20 ஆம் தேதி பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்பட்டது. 2017.10.04 ஆம் தேதி, ஜனாதிபதி அவர்களினால்

இப்பணிக்காக எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளரும் இரு அங்கத்தினர்களும் இக்குழுவின் அங்கத்தினர்களாக நியமனம் செய்யப்பட்டனர். நிறைவு செய்யப்பட்ட அறிக்கை 2018.02.19 ஆம் தேதி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. அது 2018.03.06 ஆம் தேதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2018.08.24 ஆம் தேதி அவ்வறிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் அது மீளாய்வுக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. இவ்வறிக்கை தொடர்பாக பாராளுமன்றம் எடுக்கின்ற அடுத்த நடவடிக்கை பற்றி எல்லை நிர்ணய ஆணைக்குழு அவதானத்துடன் இருக்கின்றது.

## 4.0 கடந்த மூன்று மாத காலத்திற்குள் செயலாற்றுகை

### 4.1 கூட்டங்கள்

**எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கூட்டங்கள்**:- இக்கால ஆண்டிற்குள் நிர்வாக மற்றும் கொள்கை ரீதியான விடயங்களை கலந்துரையாடுவதற்காக இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. 2020 மார்ச் மாதம் 27 ஆம் தேதி நடாத்தப்படவிருந்த கூட்டம் **Covid-19** தொற்று நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட வேண்டி வந்தது.

**46** ஆம் கூட்டம் – **2020.01.23**

**47** ஆம் கூட்டம் – **2020.02.27**

தனிமைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, நாட்டில் விஷேடமாக மேல் மாகாணத்திற்குள் ஊரடங்கு விதிக்கப்பட்டதன் காரணமாக, 2020.03.16 ஆம் தேதி முதல் அலுவலகத்தை மூடி வைக்க வேண்டி வந்ததோடு, சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொலைபேசி மற்றும் இணைய தொடர்பாடல்கள் ஊடாக பணிகள் ஆற்றப்பட்டதோடு, மிக இன்றியமையாத சந்தர்ப்பங்களில் தேவைப்பாட்டுக்கமைய அலுவலர்கள் வந்து பணியாற்றினர்.

### 4.2 எல்லை நிர்ணயம் மற்றும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகள் பற்றி மக்களை அறிவூட்டல்

எல்லை நிர்ணய தலைப்பு மற்றும் அதனோடு இடைநேர் விளைவான பிரச்சினைகள் தொடர்பாக பொதுமக்களின் புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக செய்திப் பத்திரிகைகளுக்கு கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்கும் ஆணைக்குழுவின் அங்கத்தினர்களின் வளவாளர் பங்களிப்போடு தொழில் வல்லுநர்களின் அமைப்புக்களின் அங்கத்தினர்களை அறிவூட்டுவதற்குமான அமர்வுகளை நடாத்த ஆணைக்குழு திட்டமிட்டிருக்கிறது.

இங்கு பிரதானமாக நில அளவைத் திணைக்களத்தின் பணியாட் குழுவினர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணியாட் குழுவினர், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கான பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன. கடந்த காலாண்டில் மாவட்ட நிருவாக அலுவலர்களின் வேலைப்பளு காரணமாக, நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டன.

### 4.3 நிகழ்கால தேசிய நிருவாக முறைமைக்குள் அமுலிலுள்ள புவியியல் எல்லைகள் தொடர்பான மீளாய்வு

இலங்கையின் நிருவாக முறைமைக்குள் அமுலிலுள்ள புவியியல் எல்லைகள் மிகத் துரிதமாக மிகப்பொருத்தமான வகையில் தயார்படுத்தப்பட வேண்டுமென தனது நான்காண்டுகள் காலப்பகுதிக்குள் எல்லை நிர்ணய ஆணைக்குழு புரிந்து கொணடுள்ளது. கலாநிதி பண்டாரநாயக்க இது தொடர்பான நகல் அறிக்கையொன்றைத் தயாரித்ததோடு, 2020.02.27 ஆம் தேதிய எல்லை நிர்ணய ஆணைக்குழுக் கூட்டத்தில் அது பற்றிக் கலந்துரையாடப்பட்டது. இங்கு தற்போது நிலவுகின்ற பிரச்சினைகள் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான விதம் என்பன குறித்து பகுப்பாய்வு ரீதியாகவும், பூரண விளக்கங்களுடன் கூடியதாகவுமான அறிக்கையொன்று " இலங்கையின் கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் என்பவற்றின் எல்லைகளை மிகப்பொருத்தமான வகையில் நிர்ணயிப்பதற்கான ஒரு முறைமை" என்ற பெயரில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வுத்தேச முறைமைக்கு அமைய, சனத்தொகை அடர்த்தி மற்றும் புவியியல் வேறுபாடுகள் என்பவற்றுக்குப் பொருந்தக் கூடியவாறு சனத்தொகைப் பரம்பல் மற்றும் நிலப்பிரதேசம் தொடர்பாக கிராம அலுவலர் பிரிவு தெளிவான பொறுப்புக்களை வகிக்கின்ற நிலைமைக்குள்ளாவதால், ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவும் நன்கு நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடியதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் முகாமைத்துவம் செய்யத்தக்கதாக அமையும். (பின்னிணைப்பு 02)

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் நிலஅளவையியல் பாடநெறியைப் பயிலுகின்ற மாணவர் ஒருவரினால் தனது இறுதிக் கருத்திட்டமாக இலங்கையின் மாவட்டங்களின் எல்லைகளை அடையாளமிடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதோடு, அதன் மேற்பார்வைப் பொறுப்பை ஏற்குமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் கலாநிதி கே. தவலிங்கம் அவர்களிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்கருத்து எல்லை நிர்ணயம் தொடர்பான மிக முக்கியமான திருப்புமுனையொன்றாகக் கருதப்பட்டு ஆணைக்குழுவினால் அதற்கான உயர்ந்தபட்ச ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டுமென ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இணக்கம் கண்டுள்ளனர். உரிய மாணவர் கருத்திட்டத்தை நிறைவு செய்துள்ளதோடு, அக்கருத்திட்ட அறிக்கையை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளார்.

## 5.0 நிருவாக மற்றும் நிதி விடயங்கள்

### 5.1 எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கான அலுவலக வசதிகள்

2016 ஆம் ஆண்டிலிருந்து எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அலுவலகத்தை நிலஅளவைத் திணைக்களத்தில் வாடகைக் கொடுப்பனவு எதுவுமின்றி நடாத்திச் செல்வதற்கு நில அளவையாளர் நாயகம் இடமளித்துள்ளார்.

அனைத்து ஆணைக் குழுக்களும் ஒரே கட்டிடத் தொகுதிக்குள் தாபிக்கப்படுவதற்கான திட்டத்திற்கு அமைய நிர்மாணிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடத் தொகுதியின் திட்டம் தொடர்பான இறுதிக் கலந்துரையாடல் 2019.08.15 ஆம் தேதி பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்டது, அக்கூட்டத்தில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர், செயலாளர் மற்றும் இணைப்புச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தற்போதைய அலுவலக முகவரி**
எல்லை நிர்ணய ஆணைக்குழு
நில அளவையாளர் நாயக அலுவலகக் கட்டிடம்
த பெ..506
கொழும்பு 05

## 5.2 போக்குவரத்துப் பணிகள்

பொதுத்திறை சேரியினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு 2016 ஆம் ஆண்டில் இரண்டு வாகனங்கள் வழங்கப்பட்டன.CAP 7180 என்ற வாகனம் ஜனாதிபதியின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டு, அதே பெயரில் காப்புறுதி செய்யப்பட்டுள்ளதோடு, அது தவிசாளருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மோட்டார் வாகனம் CAR 0347 என்பது ஜனாதிபதி செயலாளர் அலுவலகத்தினால் இணைக்கப்பட்டது. இவ்வாகனமே எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் அனைத்து போக்குவரத்து நடவடிக்கைகளுக்குமென தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

## 5.3 எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அலுவலர்களை நியமனம் செய்தல்

எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்படுகின்ற பணிகளின் பாரதூரமான தன்மையைக் கருத்திலெடுத்து, முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அவரது 2016.02.05 ஆம் தேதிய DMS/1029 ஆம் இலக்கக் கடிதத்தினூடாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன,

| பதவி | நிலை | பதவிகளின் எண்ணிக்கை | வேதனக் குறியீடு |
|---|---|---|---|
| செயலாளர் | சிரேட்ட | 01 | SL-3-2006 |
| கணக்காளர் | சிரேட்ட | 01 | SL-1-2006 |
| இணைப்புச் செயலாளர் | மூன்றாம் தர | 01 | பொ.நி.சு. 6/2006 |
| நிருவாக அலுவலர் | மூன்றாம் தர | 01 | MN-7-2006 |
| மொழிபெயர்ப்பாளர்கள் | இரண்டாம் தர | 03 | MN-6-2006 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர்கள் | இரண்டாம் தர | 02 | MT-1-2006 |
| அரச முகாமைத்துவ உதவியாளர்கள் | இரண்டாம் தர | 02 | MN-2-2006 |
| சாரதிகள் | ஆரம்ப | 02 | PL-3-2006 |
| அலுவலக உதவியாளர்கள் | ஆரம்ப | 02 | PL-1-2006 |
| மொத்தம் | | 15 | |

இக்காலாண்டிற்குள் எந்தவொரு நியமனமும் மேற்கொள்ளப்படவில்லை. 2020.03.31 ஆம் தேதியன்று பணியில் ஈடுபட்டிருந்தோர் விபரம் வருமாறு:

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட | நிரப்பப்பட்ட | வெற்றிடம் |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | 01 [a] | - |
| கணக்காளர் | 01 | 01 [a] | - |
| இணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| நிருவாக அலுவலர் | 01 | 01 | - |
| மொழிபெயர்ப்பாளர் | 03 | 0 | 03 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 02 | 0 | 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 | 02 | - |
| சாரதி | 02 | 02 | - |
| அலுவலக உதவியாளர்கள் | 02 | 02 | - |
| மொத்தம் | 15 | 10 | 05 |

[a] பகுதி நேரம்

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பதில் கடமை செயலாளர் திரு. சமன் ரத்நாயக்கவின் நியமனம் 2020 மார்ச் 21 ஆம் தேதி முதல் ஓர் ஆண்டு காலத்திற்கு நீடிக்கப்பட்டது.

பதில் கடமை கணக்காளராகக் கடமையாற்றிய திரு. புலத்சிங்ஹலவின் நியமனம் 2020.03.31- ஆம் தேதி முடிவடைவதோடு, 2020 ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் இன்னும் ஓர் ஆண்டிற்கு அவரது நியமனத்தை நீடிக்கச் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

அலுவலக உதவியாளர் திருமதி டப்ளியூ. ஏ. டி. விக்ரமாரச்சி 2019.10.24 ஆம் தேதி முதல் வேதனத்துடன் கூடியதும் அரை வேதனத்துடன் கூடியதுமான பிரசவ லீவினைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

தவிசாளரின் இணைப்புச் செயலாளர் திரு. நளின் சேமகே நிலஅளவைத் திணைக்களத்திலிருந்து ஆணைக்குழுவுக்கு விடுவிக்கப்பட்டுள்ள காலக்கெடு 2020.03.15 ஆம் தேதியன்று முடிவடையவிருந்தமையால் அவரின் சேவையைத் தொடர்ந்தும் பெற்றுக் கொள்வதை இயலச் செய்யத் தக்கவாறு அவரை விடுவிக்குமாறு நிலஅளவை அதிபதியினூடாக அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்கு கோரிக்கையொன்றை சமர்ப்பிக்க 2019.12.23 ஆம் தேதி நடைபெற்ற ஆணைக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, 2020.01.01 ஆம் தேதி உரிய கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் PSC/APP/05/02/09/2016 ஆம் இலக்க மற்றும் 2020.03.04 ஆம் தேதிய கடிதத்தினூடாக அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கும் தவிசாளரின் இணக்கப்பாட்டுக்கும் இணங்க இணைப்புச் செயலாளர் திரு. நளின் சேமகே அவர்களை 2020 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு முழு நேர அலுவலராக விடுவிக்கப்பட்டார்.

மேலும் சாரதி திரு. ஏ.எச்.டி திலஞ்ஜன த சில்வா மற்றும் சாரதி திரு.டி.ஜி.கெலும் ஆகியோரும் 2020 பாராளுமன்றத் தேர்தல் கடமைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவில் கடமையாற்றுவதற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டனர்.

## 6.0. தீர்க்கப்படாத விடயங்கள்

எல்லை நிர்ணய ஆணைக்குழு தனது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் காலாண்டு அறிக்கைகளூடாக கோடிட்டுக் காட்டிய தீர்க்கப்படாத விடயங்கள் தொடர்பான பதிலுக்காக எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. அவையாவன:

1. தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்குரிய பணிப் பொறுப்புக்கள் விதிக்கப்படவில்லை. இதற்கிடையில் இலங்கையில் காணப்படுகின்ற நியதிச் சட்டங்கள், நடைமுறை ஒழுங்குவிதிகள் ஆகியவற்றினூடாக தேர்தல் தொகுதிகள் மற்றும் நிருவாக மட்டத்திலான பல்வேறு எல்லை நிர்ணயங்கள் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, இவை மிகச்சிறந்த பிரதிபலனைத் தர வேண்டுமாயின், அவை அனைத்தும் உண்மையான முறையில் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. அத்தகைய நிலைமையை ஏற்படுத்தும் நோக்கோடு,

- 2016 ஜூலை மாதத்தில் "அரசியலமைப்பு திருத்தத்தினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப் பொறுப்புக்களை விரிவுபடுத்துதல்" என்ற தலைப்பில் கொள்கை முன்மொழிவொன்று அரசியலமைப்பு சபையின் தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

- அதே முன்மொழிவு அரசியலமைப்பு சபையின் செயற்பாட்டுக் குழுவின் அரசாங்க சேவை தொடர்பான பாராளுமன்ற உப குழுவின் செயலாளருக்கு, தவிசாளரினால் தயாரிக்கப்பட்ட "புதிய அரசியல் அமைப்பொன்று அல்லது அரசியலமைப்புத் திருத்தமொன்று உருவாக்கப்படுகின்ற பொழுது எல்லை நிர்ணய ஆணைக்குழு தொடர்பாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்" என்ற தலைப்பிலான பின்னிணைப்பொன்றுடன் கூடியதாக 2016 ஜூலை மாதம் சமர்ப்பிக்கப்பட்டது. இம்முன்மொழிவுக்கு உப குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டது.

- புதிய அரசியலமைப்பொன்றை அல்லது புதிய அரசியலமைப்புத் திருத்தமொன்றைக் கொண்டு வருகின்ற போது கருத்தில் கொள்ளப்படுவதற்காக "இலங்கையின் எல்லை நிர்ணயத்துக்கான கோட்பாடுகளும் கொள்கைச் சட்டகமும்" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட ஒரு கடிதம் 2016 ஒக்தோபர் மாதத்தில் அதன் தவிசாளரான கௌரவ பிரதம மந்திரி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

எல்லை நிர்ணய ஆணைக்குழு இம்முன்மொழிவுகள் தொடர்பாக கிடைக்கப் போகின்ற பதிலுக்காக காத்திருக்கின்றது.

3. எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கான நியதிச் சட்டமொன்றைத் தயாரிப்பதன் தேவைப்பாட்டுக்காக 2017.10.18 மற்றும் 2018.10.18 ஆகிய தினங்களில் ஜனாதிபதி

அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கொள்கை விளக்கப் பத்திரம் மற்றும் அமைச்சரவைப் பத்திர வரைபு தொடர்பாக சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் பெறப்பட்டுள்ளன. அதற்கமைய எதிர்வரும் அரசியலமைப்புத் திருத்தமொன்றின்போது எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்குரிய சட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்படுமென ஜனாதிபதியின் செயலாளரினால் PS / AC / CCU / 01 / 03 / 05 ஆம் இலக்க மற்றும் 2019.06.23 ஆம் தேதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்னிணைப்பு -1

# எல்லை நிர்ணய ஆணைக்குழு

# 2020 - வருடாந்த அமுலாக்கல் திட்டம்

## நோக்கு

நெறிமுறையானதும் நீதியானதுமான கோட்பாடுகளின் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்யத்தகு உயர் நிலையை அடையப் பெறல்.

## பணிகள்

அரசியலமைப்பின் மூலம் அதிகாரம் கிடைக்கப் பெற்றுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையுடனும், வினைத்திறனுடனும், வெளிப்படைத் தன்மையுடனும், நம்பத்தகுந்த முறையிலும், சட்டத்திற்கிணங்கவும் எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ளல்.

# நோக்கங்கள்

- ஒவ்வொரு வாக்காளருக்கும் அல்லது பிரசைக்கும் உயர் மட்டத்திலான சமத்துவ பிரதிநிதித்துவம் கிடைக்கத் தக்க விதத்திலும் மக்களின் சனநாயக உரிமைகள் மற்றும் அதற்கான சூழ்நிலை என்பவற்றை பாதுகாக்கத்தக்க விதத்திலும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கான தேர்தல் தொகுதிகள் மற்றும் ஏனைய நிர்வாக அலகுகளை எல்லை நிர்ணயம் செய்தல்
- தேர்தல் தொகுதிகள் அல்லது நிர்வாக பிரதேசங்கள் அல்லது கல்வி, சுகாதார அல்லது பாதுகாப்பு போன்ற சமூக - பொருளாதார சேவைகளுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காக கையளிக்கப்படுகின்ற எல்லை நிர்ணயப் பணிகளை உரிய கால அட்டவணைக்குள் பூர்த்தி செய்தல்.
- அரசாங்கத்திற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் தமது தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான எல்லை நிர்ணயங்களின் போது உரிய அறிவையும் தகவல்களையும் வழங்குதல்.
- எல்லை நிர்ணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் உரிய ஆவணங்களை ஒன்று திரட்டுகின்ற ஒரு மத்திய நிலையத்தை உருவாக்குதல்.

## பணிப் பொறுப்புகள் / சட்ட கொள்கைகள்

1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்போடு தொடர்புடைய அனைத்து ஏற்பாடுகள்

# உள்ளடக்கம்

01 ஒழுங்கமைப்பும் பணியாட் குழுத் தகவல்களும் .................................................................................................. 01

02 வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் .................................................................................................................. 03

03 அமுலாக்கல் திட்டம்........................................................................................................................................... 04

04 அனுமதிக்கப்பட்ட செலவுத் திட்டத்திற்கு அமைய மாதாந்த/ காலாண்டு நிதிப் பாய்ச்சல் வெளிப்படுத்துகை ..... 10

# 01. ஒழுங்கமைப்புக் கட்டமைப்பும் பணியாட் குழுவினர்களின் தகவல்களும்

## A. ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



## B. எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழுவினர்

எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்குக் கையளிக்கப்பட்ட பணிப் பொறுப்பின் பாரதூர தன்மையை கருத்திலெடுத்து, முகாமைத்துவ சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் 2016.02.05 ஆம் தேதிய DMS/1029 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கீழ்வரும் நியமனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

| பதவி | நிலை | பதவிகளின் எண்ணிக்கை | வேதனக் குறியீடு |
|---|---|---|---|
| செயலாளர் | சிரேட்ட | 01 | SL-3-2006 |
| கணக்காளர் | சிரேட்ட | 01 | SL-1-2006 |
| இணைப்புச் செயலாளர் | மூன்றாம் தர | 01 | பொ.நி.சு. 6/2006 |
| நிருவாக அலுவலர் | மூன்றாம் தர | 01 | MN-7-2006 |
| மொழிபெயர்ப்பாளர் | இரண்டாம் தர | 03 | MN-6-2006 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | இரண்டாம் தர | 02 | MT-1-2006 |
| அரச முகாமைத்துவ உதவியாளர்கள் | இரண்டாம் தர | 02 | MN-2-2006 |
| சாரதிகள் | ஆரம்ப | 02 | PL-3-2006 |
| அலுவலக உதவியாளர்கள் | ஆரம்ப | 02 | PL-1-2006 |
| மொத்தம் | | 15 | |

இதற்கமைய 2019.12.31ஆம் தேதி அளவில் பணியில் ஈடுபட்டிருந்தோர் விபரம் வருமாறு

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட | நிரப்பப்பட்ட | வெற்றிடம் |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | 01 [a] | - |
| கணக்காளர் | 01 | 01 [a] | - |
| இணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| நிர்வாக அலுவலர் | 01 | 01 | - |
| மொழிபெயர்ப்பாளர் | 03 | 0 | 03 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 02 | 0 | 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 | 02 | - |
| சாரதி | 02 | 02 | - |
| அலுவலகப் பணி உதவியாளர் | 02 | 02 | - |
| மொத்தம் | 15 | 10 | 05 |

# 02. வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை 2020

| Sub Projects | Object Code | Items | Financing | Description | 2020 Estimate |
|---|---|---|---|---|---|
| | | | | **RECURRENT EXPENDITURE** | **15,165,000** |
| | | | | **Personal Emoluments** | **10,150,000** |
| | 1001 | | 21 | Salaries and Wages | |
| | 1001 | | 11 | Salaries and Wages | 7,500,000 |
| | 1002 | | | Over Time and Holiday Payments | 150,000 |
| | 1003 | | | Other Allowances | 2,500,000 |
| | | | | **OTHER RECURRENT** | **5,015,000** |
| | | | | **Traveling Expences** | **260,000** |
| | 1101 | | | Domestic | 60,000 |
| | 1102 | | | Foreign | 200,000 |
| | | | | **Supplies** | **1,465,000** |
| | 1201 | | | Stationary and Office Requisites | 500,000 |
| | 1202 | | | Fuel | 950,000 |
| | 1203 | | | Diets and Uniforms | 15,000 |
| | | | | **Maintenance Expenditure** | **750,000** |
| | 1301 | | | Vehicles | 500,000 |
| | 1302 | | | Plant and Machinery | 200,000 |
| | 1303 | | | Building and Structures | 50,000 |
| | | | | **Services** | **2,520,000** |
| | 1401 | | | Transport | 1,250,000 |
| | 1402 | | | Postal and Communication | 470,000 |
| | 1403 | | | Electricity and Water | 300,000 |
| | 1404 | | | Rents and Local Taxes | |
| | 1405 | | | Other | 500,000 |
| | | | | **Transfers** | **20,000** |
| | 1506 | | | Property Loan Interest to Public Servants | 20,000 |
| | | | | **Other Recurrent Expenditure** | - |
| | | | | | |
| | | | | **CAPITAL EXPENDITURE** | **400,000** |
| | | | | **Rehabilitation and Improvement of Capital Assets** | - |
| | 2001 | | | Buildings and Structures | |
| | | | | **Acquisition of Capital Assets** | **200,000** |
| | 2101 | | | Vehicles | - |
| | 2102 | | | Furniture and Office Equipment | |
| | 2103 | | | Plant, Machinery and Equipment | 200,000 |
| | | | | **Capacity Building** | **200,000** |
| | 2401 | | | Staff Training | 200,000 |
| | | | | **Other Capital Expenditure** | - |
| | 2505 | | | Procurement Preparedness | |
| | | | | | |
| | **TOTAL EXPENDITURE** | | | | **15,565,000** |
| | **TOTAL FINANCING** | | | | **15,565,000** |
| | | | | **Domestic** | 15,565,000 |
| | | | | 11 Domestic Fund | 15,565,000 |
| | | | | 21 Special Law | |

# 03. அமுலாக்கல் திட்டம்

**1.0 உத்தேச பணி:-** திட்டமிடலும் பயிற்சியும்

| கோட்பாடு | உபாய மூலம் | உத்தேச பணி | ஒதுக்கீடு( ரூ.000') | ஆரம்பத்திகதி | நிறைவு பெறும் திகதி | நிதி இலக்கு (ரூ.000') (மொத்தம்) | | | | பகுதிகளில் (மொத்தம்) | | | | சுட்டியின் நிறைவு | பொறுப்பு | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | | | |
| திட்டமிடல் | | 1.1 வருடாந்த திட்டத்தைத் தயாரித்தல் | காரணம் | 01.01.2020 | 31.01.2020 | | | | | √ | | | | வருடாந்த அமுலாக்கல் திட்டம் | செயலாளர் | |
| | | 1.2 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல் | காரணம் | 01.01.2020 | 31.12.2020 | | | | | 1 | 2 | 3 | 4 | வருடாந்த அமுலாக்கல் திட்டம் | செயலாளர் | |
| பயிற்சி | | 1.3 ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் | காரணம் | 01.01.2020 | 31.12.2020 | | | | | | √ | √ | | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட எண்ணிக்கை | செயலாளர் | |
| அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் | | 1.4 எல்லை நிர்ணய பிரச்சினைகள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடல் | காரணம் | 01.01.2020 | 31.12.2020 | | | | | 1 | 2 | 3 | 4 | நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் எண்ணிக்கை | செயலாளர் | |

**2.0 உத்தேச பணி :-** தகவல்களை ஒன்று திரட்டல்

| கோட்பாடு | உபாய மூலம் | உத்தேச பணி | ஒதுக்கீடு( ரூ.000') | ஆரம்பத்திகதி | நிறைவு பெறும் திகதி | நிதி இலக்கு (ரூ.000') (மொத்தம்) | | | | பகுதிகளில் (மொத்தம்) | | | | சுட்டியின் நிறைவு | பொறுப்பு | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | | | |
| | | **2.1** தகவல்களை வர்த்தமானிகளை ஒன்று திரட்டல் உள்ளூர் அதிகார சபைகளின் (மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள்) எல்லைகள் | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | அனைத்து வர்த்தமானி அறிவித்தல் களும் ஆணைக்கு ழு வசம் உள்ளமை | ஆணைக்குழு அங்கத்தவர்களும் செயலாளரும் | |
| | | 2.2 தகவல்களை/ வர்த்தமானிகளை ஒன்று திரட்ட நிர்வாக அலகுகளின் எல்லைகள் (மாகாண, மாவட்ட, பிரதேச செயலக பிரிவுகள், கிராம அலுவலர் பிரிவுகள்) | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | அனைத்து வர்த்தமானி அறிவித்தல் களும் ஆணைக்கு ழு வசம் உள்ளமை | ஆணைக்குழு அங்கத்தவர்களும் செயலாளரும் | |

**3.0 உத்தேச பணி :-** இலங்கையின் நிகழ்கால சனத்தொகை மற்றும் காணிகளின் அளவு தொடர்பாக முன்னுரிமை அடிப்படையில் கடந்த பாராளுமன்றத் தேர்தல்களோடு தொடர்புடைய எல்லை நிர்ணய அறிக்கைகளை பகுப்பாய்வு செய்தல்

| கோட்பாடு | உபாய மூலம் | உத்தேச பணி | ஒதுக்கீடு(ரூ.000') | ஆரம்பத் திகதி | நிறைவு பெறும் திகதி | நிதி இலக்கு (ரூ.000') (மொத்தம்) | | | | பகுதிகளில் (மொத்தம்) | | | | சுட்டியின் நிறைவு | பொறுப்பு | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | | | |
| | | 3.1. 1946; 1959; 1976; 1981; 1988. பாராளுமன்ற தேர்தல்கள் பகுப்பாய்வு | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | முந்திய எல்லை நிர்ணய அறிக்கைகளை ஆய்வு செய்தமை | ஆணைக்குழு அங்கத்தவர்களும் செயலாளரும் | |
| | | 3.2 நிகழ்கால தேர்தல் மாவட்ட எல்லைகளை ஆய்வு செய்தலும் உத்தேச தேர்தல் தொகுதிகளோடு ஒப்பீடு செய்தலும் | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | ஆய்வு நிறைவு பெற்றுள்ளமை | ஆணைக்குழு அங்கத்தவர்களும் செயலாளரும் | |
| | | 3.3 மாகாணசபை தேர்தல் தொகுதி எல்லைகளை ஆய்வு செய்தல் | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | அறிக்கையின் மீளாய்வு நிறைவு பெற்றுள்ளமை | ஆணைக்குழுவின் அங்கத்தவர்களும் செயலாளரும் | |

**4.0 உத்தேச பணி:-** நிர்வாக அலகுகளின் எல்லை நிர்ணயம் தொடர்பான ஆய்வு

| கோட் பாடு | உபாய மூலம் | உத்தேச பணி | ஒதுக்கீடு(ரூ.000') | ஆரம்பத் திகதி | நிறைவு பெறும் திகதி | நிதி இலக்கு (ரூ.000') (மொத்தம்) | | | | பகுதிகளில் (மொத்தம்) | | | | சுட்டியின் நிறைவு | பொறுப்பு | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | | | |
| | | 4.1 மாகாண மற்றும் மாவட்ட எல்லை நிர்ணய ஆய்வு | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | ஆய்வு நிறைவு பெற்றுள்ளமை | ஆணைக்குழு அங்கத்தவர்களும் செயலாளரும் | |
| | | 4.2 நிகழ்கால பிரதேச செயலகப் பிரிவு ஆய்வு | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | ஆய்வு நிறைவு பெற்றுள்ளமை | ஆணைக்குழு அங்கத்தவர்களும் செயலாளரும் | |
| | | 4.3 கிராம அலுவலர் பிரிவு எல்லை ஆய்வும் மீள் எல்லை நிர்ணய முன்மொழிவும் | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | ஆய்வு நிறைவு பெற்றுள்ளமை | ஆணைக்குழு அங்கத்தவர்களும் செயலாளரும் | |

**5.0** **உத்தேச பணி:-** உள்ளூர் அதிகார சபை எல்லை நிர்ணயம் தொடர்பான ஆய்வு

| கோட்பாடு | உபாய மூலம் | உத்தேச பணி | ஒதுக்கீடு( ரூ.000') | ஆரம்பத் திகதி | நிறைவு பெறும் திகதி | நிதி இலக்கு (ரூ.000') (மொத்தம்) | | | | பகுதிகளில் (மொத்தம்) | | | | சுட்டியின் நிறைவு | பொறுப்பு | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | | | |
| | | 5.1 பிரதேச சபை இல்லை ஆய்வு | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | ஆய்வு நிறைவு பெற்றுள்ளமை | ஆணைக்குழு அங்கத்தவர்களும் செயலாளரும் | |
| | | 5.2 மாநகர சபை எல்லை ஆய்வு | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | ஆய்வு நிறைவு பெற்றுள்ளமை | ஆணைக்குழு அங்கத்தவர்களும் செயலாளரும் | |
| | | 5.3 நகரசபை எல்லை ஆய்வு | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | ஆய்வு நிறைவு பெற்றுள்ளமை | ஆணைக்குழு அங்கத்தவர்களும் செயலாளரும் | |

**6.0 உத்தேச பணி:-** நிகழ்காலத்துக்குப் பொருத்தமான அறிக்கைகள்/ சுவடிக் கூடம் ஒன்றைத் தயாரித்தலும் ஆவணங்களின் மென்பிரதிகளை தயாரித்தலும்

| கோட்பாடு | உபாய மூலம் | உத்தேச பணி | ஒதுக்கீடு(ரூ.000') | ஆரம்பத்திகதி | நிறைவு பெறும் திகதி | நிதி இலக்கு (ரூ.000') (மொத்தம்) | | | | பகுதிகளில் (மொத்தம்) | | | | சுட்டியின் நிறைவு | பொறுப்பு | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | | | |
| . | | 6.1நிகழ்காலத்துக்குப் பொருத்தமான அறிக்கைகள்/ சுவடிக் கூடம் ஒன்றை தயாரித்தல் | விடயம் | 01.01.2020 | 31.12.2020 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | அறிக்கை நிறைவு பெற்றுள்ளமை | ஆணைக்குழு அங்கத்தவர்களும் செயலாளரும் | |

# 04. அங்கீகரிக்கப்பட்ட செலவு திட்டத்துக்கமைய மாதாந்த காலாண்டு நிதி பாய்ச்சல் வெளிப்படுத்துவேன் (ஜனவரி-ஏப்ரல்)

| | | அனுமதிக்கப்பட்ட செலவு திட்டத்துக்கமைய மாதாந்த நிதித் தேவைப்பாடு | | | | | | | | | | | | | | | | | ரூ.'000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செலவினம் விடயங்கள் (செலவு விடய குறியீட்டு இலக்கத்துடன்) | ஜன | பெப் | மார்ச் | 1ஆம் காலாண்டின் மொத்தம் | ஏப் | மே | ஜூன் | 2 ஆம் காலாண்டின் மொத்தம் | ஜூலை | ஒக. | செப். | 3 ஆம் காலாண்டின் மொத்தம் | ஒக் | நவ. | திச. | 4 ஆம் காலாண்டின் மொத்தம் | முழு மொத்தம் | |
| I | ஆட்களின் வேதனாதிகள் (1001,1003) | 900 | 900 | 900 | **2700** | 898 | | | | | | | | | | | | | |
| | வேதனத்துடன் வழங்கப்படும் ஏனைய படிகள் (1003 செலவு தலைப்பு தவிர) | 188 | 188 | 187 | **563** | 187 | | | | | | | | | | | | | |
| II | மேலதிக நேர மற்றும் விடுமுறை தின சம்பளங்கள்(1002) | 40 | 20 | 10 | **70** | 10 | | | | | | | | | | | | | |
| III | ஏனைய அனைத்து மீண்டெழும் செலவினங்கள் | 60 | 300 | 200 | **560** | 50 | | | | | | | | | | | | | |
| | மீண்டெழும் செலவின மொத்தம் | 1188 | 1408 | 1297 | **3893** | 1145 | | | | | | | | | | | | | |
| IV | மீள் நிரப்பப்பட முடியாத வெளிநாட்டு உதவிகள் | | | | | | | | | | | | | | | | | | |
| V | ஏனைய அனைத்து முதலீட்டு செலவினங்களுக்காக | 20 | 50 | 50 | **120** | 20 | | | | | | | | | | | | | |
| VI | அ.அ. கடன்களும் முற்பணங்களும் | | | | | | | | | | | | | | | | | | |
| VII | வைப்புக் கணக்கு | | | | | | | | | | | | | | | | | | |
| VIII | ஏனைய முற்பணக் கணக்குகள் | | | | | | | | | | | | | | | | | | |
| | முழு மொத்தம் | **1208** | **1458** | **1347** | **4013** | **1165** | | | | | | | | | | | | | |

## பின்னிணைப்பு -2

# இலங்கையின் கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் என்பவற்றின் எல்லைகளை மிகப் பொருத்தமான முறையில் நிர்ணயிப்பதற்கான ஒரு முறைமை

## நிறைவேற்றுப் பொழிப்பு

நாட்டு மக்களுக்கான கொள்கை அமுலாக்கங்களை மேற்கொள்வதற்காகவும் வளப்பகிர்வுகளுக்காகவும் கல்வி, சுகாதாரம், சுற்றாடல் பாதுகாப்பு, சட்ட அமுலாக்கம், பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற சேவைகளை வழங்குவதற்காகவும், இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தனியார் துறையினருக்கும் நம்பத்தகுந்ததும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தகவல்கள் தேவைப்படுகின்றன. தற்போது இலங்கையில் தகவல்கள் தேசிய நிருவாக முறையினூடாகவே வழங்கப்படுவதோடு, மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குகையில், அதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற எல்லை வரையறைகள் ஒன்றிற்கொன்று வேறுபட்டுக் காணப்படுகின்றன. வினைத்திறன் மிக்க தேசிய நிருவாக முறைமையொன்றிற்குள் ஒவ்வொரு பிரதேசமும் பிரிக்கப்பட வேண்டியது, நிருவாக ரீதியாக முகாமைத்துவம் செய்ய முடிந்த விதத்திலான பல நிலத்தோற்ற அலகுகள் உள்ளடக்கப்படும் விதத்திலாகும். அப்போது அவ்வலகுகளிலிருந்து தகவல்களை ஒன்று திரட்டலும், சேவைகளை வழங்குதலும் முறையாகவும் வினைத்திறனுடனும் ஆற்றப்பட முடியும். இவ்வாறு இனங்காணப்படுகின்ற நில அலகுகளின் பரப்பளவு அப்பிரதேசத்தின் சனத்தொகைப் பரம்பல், நிலத்தோற்றம், மலைப் பகுதிகள், நீரேந்து பிரதேசங்கள், காட்டு வளங்கள் போன்ற நில இயல்புகளையும் வெளிப்படுத்தக் கூடியதாயிருத்தல் வேண்டும். இத்தகைய தேசிய நிருவாக முறைமையொன்றைத் தாபிப்பதாயின், இலங்கையிலே காணப்படுகின்ற தேசிய நிருவாக முறையிலுள்ள பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கும் அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்குமான மீளாய்வொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கையின் தேசிய நிருவாக முறைமையில் காணப்படுகின்ற மிகச்சிறிய அலகு கிராம அலுவலர் பிரிவாகும். கிராம அலுவலர் பிரிவுகள் பல ஒன்றிணைக்கப்பட்டு பிரதேச செயலகப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன, பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாக மிகப்பெரிய நிருவாக அலகான நிருவாக மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நாடெங்கிலும் சனத்தொகை, சுற்றாடல் தகவல்கள் என்பவற்றை வழங்குவதற்கு இத்தேசிய நிருவாக முறைமையே பயன்படுத்தப்படுகின்றது. அத்தகவல்களை வழங்குகின்ற மிகச்சிறிய அலகு கிராம அலுவலர் பிரிவேயாகும். அதனைத் தொடர்ந்து, திரட்டப்படுகின்ற தகவல்கள் பிரதேச செயலகப் பிரிவுகள், மாவட்டங்கள் அல்லது மாகாண மட்டங்களில் தேவைப்படுகின்றவாறு ஒன்றிணைக்கப்படுகின்றன.

கிராம அலுவலர் பிரிவின் நிருவாகம் தொடர்பான பொறுப்பினை வகிப்பவர் கிராம அலுவலராவார். இன்று இலங்கையில் 14,021 கிராம அலுவலர் பிரிவுகள் காணப்படுகின்றன. இறுதியாக 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ள இலங்கையின் சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்புக்கு அமைய, கிராம அலுவலர் பிரிவொன்றின் சனத்தொகை மற்றும் நிலப்பரப்பு என்பன சராசரியாக முறையே 1,452 ஆட்களும் 4.7 சதுர கிலோமீட்டர் பரப்பளவுமாகும். எது எவ்வாறாயினும் ஒவ்வொரு மாவட்டத்தினதும் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் உள்ளடக்கப்படுகின்ற சனத்தொகை மற்றும் நிலப்பரப்பு என்பவற்றிற்கிடையே பாரிய இடைவெளிகள் காணப்படுகின்றன. சதுர கிலோமீட்டர் 516 உடன் கூடிய பரப்பளவைக் கொண்ட

(அம்பாந்தோட்டை) கிராம அலுவலர் பிரிவுகளும், 0.04 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட (அம்பாறை, மட்டக்களப்பு) கிராம அலுவலர் பிரிவுகளும் காணப்படுகின்றன. சனத்தொகையைப் பொறுத்தவரை 28,003 (கொழும்பு) ஆட்களைக் கொண்ட கிராம அலுவலர் பிரிவுகளைப் போலவே 100 லும் குறைவான ஆட்களைக் கொண்ட கிராம அலுவலர் பிரிவுகளும் (மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, பொலன்னறுவை, திருக்கோணமலை) காணப்படுகின்றன.

அடுத்த மட்டத்தில் பிரதேச செயலாளர் அந்தந்த பிரதேச செயலகப் பிரிவுகளின் நிருவாகம் தொடர்பாகப் பொறுப்புக் கூறுகின்றவராவார். தற்போது இலங்கையில் 331 பிரதேச செயலகப் பிரிவுகள் காணப்படுகின்றன. பிரதேச செயலகப் பிரிவொன்றிற்குள் உள்ளடக்கப்படுகின்ற கிராம அலுவலர் பிரிவுகளின் சராசரி எண்ணிக்கை 42 ஆகும். சனத்தொகை மற்றும் நிலப்பரப்பு என்பவற்றின் சராசரிகள் முறையே 61,509 பேரும் 198 சதுர கிலோமீட்டர்களுமாகும். கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை, நிலப்பரப்பு மற்றும் சனத்தொகை என்பன ஒவ்வொரு மாவட்டத்திற்குமிடையில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. முறையே கிராம அலுவலர் பிரிவுகள் 151 (நுவரெலியா) முதல் 5 (மொனராகலை) வரையிலும் சனத்தொகை 323,257 (கொழும்பு) பேர் முதல் 3,824 (யாழ்ப்பாணம்) பேர் வரையிலும், நிலப்பரப்பு சதுர கிலோமீட்டர் 1,066 (மொனராகலை) முதல் சதுர கிலோமீட்டர் 2.48 (அம்பாறை) வரையிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

மேலும் நாட்டின் மிகப்பெரிய மாவட்டமான அநுராதபுர மாவட்டம் 1,664 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பைக் கொண்டதாகக் காணப்படுவதோடு, அது 676 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் பரப்பளவைக கொண்ட கொழும்பு மாவட்டத்திலும் பார்க்க பத்துமடங்கு பெரியதாகும். . சமதரைத் தோற்றத்துடன் கூடிய உட்பிரவேசப் பாதை வசதிகளுள்ள வளர்ச்சியடைந்த நகரப் பிரதேசமொன்றான கொழும்பின் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 3,447 ஆட்களாகும். அது சனத்தொகை அடர்த்தி ஐதாகக் காணப்படுகின்ற மொனராகலை மாவட்டத்தின் ஒரு சதுர கிலோமீட்டருக்கு 82 ஆட்கள் என்பதிலும் பார்க்க 40 மடங்கு அதிகமாகும். ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 1500 ஆட்களிலும் பார்க்கக் கூடுதலான சனத்தொகை அடர்த்தி காணப்படுகின்ற மாவட்டங்கள், 2 மில்லியன் களிலும் கூடுதலான சனத்தொகைப் பரம்பலைக் கொண்ட கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் ஆகும், ஏனைய 18 மாவட்டங்களின் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 800 க்கும் 100 க்கும் இடைப்பட்டதாகும். மீதமுள்ள 5 மாவட்டங்களினதும் சனத்தொகை அடர்த்தி 100 லும் குறைவானதாகும்.

இவ்வேறுபாடுகளினால் சுட்டிக் காட்டப்படுவது யாதெனில், ஒரு கிராம அலுவலரினால் அல்லது ஒரு பிரதேச செயலாளரினால் நிருவகிக்கப்பட வேண்டிய சனத்தொகை அடர்த்தி மற்றும் நிலப்பரப்பின் அளவு என்பன அந்தந்த மாவட்டத்தில் காணப்படுகின்ற விஷேட தேவைப்பாடுகள், நிலத்தோற்ற அமைப்பு என்பவற்றுக்கமைய மாறுபடுகின்றனவென்பதாகும். மிகப் பொருத்தமான விடயம் யாதெனில், ஒரு கிராம அலுவலருக்கு அல்லது பிரதேச செயலாளருக்கு மற்றும் கல்வி, பொதுமக்கள் சுகாதாரம், பாதுகாப்பு, சட்டம், குடிமக்கள் பதிவு, நீர் வழங்கல், சனசமூக சுகாதாரம், விவசாய விரிவாக்கம் காட்டுவள விருத்தி போன்ற சேவைகளை வழங்குகின்ற அலுவலர் ஒருவருக்கு பிரயோக ரீதியாக முகாமைத்துவம் செய்து கொள்ள முடிந்த ஓர் எண்ணிக்கையில் சனத்தொகைப் பரம்பலும் நிலப்பரப்பும் காணப்பட வேண்டியமையாகும். எந்தவொரு கிராம அலுவலர் / பிரதேச செயலாளர் / வேறு சேவைகளுக்குரிய அலுவலகங்களினூடாக சேவையைப் பெற்றுக் கொள்கின்ற எந்தவொரு வதிவாளருக்கும் அவசர நிலையொன்றின் போது நியாயமான

கால அவகாசத்திற்குள் அடைந்து கொள்ளத் தக்க  விதத்திலான தூரத்தில் உரிய சேவை நிலையம் அமைந்திருத்தல் அவசியமாகும்.

உதாரணமாக அதிக சனத்தொகை அடர்த்தி ( சதுர கிலோ மீட்டர் 1/> 1500 நபர்கள்) காணப்படுகின்ற உட்பிரவேசப் பாதை வசதிகளுடன் கூடிய நகரப் பிரதேசமொன்றின் கிராம அலுவலர் ஒருவருக்கு ஒரு சிறிய  பிரதேசத்துக்குள் பெரும் எண்ணிக்கையான வீட்டு அலகுகளுக்கு சேவை வழங்க வேண்டி நேரிடுகின்றது. மிக  ஐதான சனத்தொகை அடர்த்தியுடன் கூடியதும் (சதுர கிலோ மீட்டர் 1/<100)   பிரயாண வசதிகளுடன் கூடியதுமான தொலைதூரத்தில் அமைந்துள்ள சமதரையான ஒரு பிரதேசமாயின்,  கிராம அலுவலருக்கு பரப்பளவில் கூடிய ஒரு நிலப்பிரதேசத்தில் மிகக்குறைந்த  வீட்டு அலகுகளுக்கான சேவைகளையே (வெள்ளப்பெருக்கு, வரட்சி, மண்சரிவு, காடழிப்பு, சட்டவிரோதமான முறையில்  மிருகங்களை வேட்டையாடுதல் போன்ற சந்தர்ப்பங்களில்) வழங்க வேண்டியேற்படுகின்றது.  வீட்டு அலகுகளின் தொகை மிகவும் குறைவான மலைப்பாங்கானதும்  காடடர்த்தியுடன் கூடியதுமான சனத்தொகைப் பரம்பல் ஐதாகவுள்ள  பிரதேசமொன்றில் காணப்படுகின்ற போக்குவரத்து வசதியின்மை காரணமாக முகாமைத்துவம் செய்ய வேண்டி வருகின்ற நிலப்பரப்பு குறையும்.

கிராம அலுவலர் பிரிவுகள் போன்றே பிரதேச செயலகப் பிரிவுகளும் பிரதேச செயலாளர் ஒருவருக்கு பிரயோக ரீதியாக முகாமைத்துவம் செய்ய முடிந்த எண்ணிக்கை கொண்ட சனத்தொகைப் பரம்பல், நிலப்பரப்பு, கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை  என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேலே காட்டப்பட்டுள்ளவாறு அந்தந்த மாவட்டங்களுக்குள் காணப்படுகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளின் பரப்பளவிலும், எண்ணிக்கையிலும் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமென  எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் பிரயோக ரீதியான. முறைமையொன்றுக்கு அமைய ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.மாவட்ட  எல்லைகளில் மாற்றம் தேவைப்படுகின்ற பிரதேசங்களின் சனத்தொகை மற்றும்  சந்தைப்படுத்தல் நிலத்தோற்ற இயல்புகள் என்பன கருத்தில் கொள்ளப்பட்டு, மாற்றங்களை மேற்கொள்வதற்கென உருவாக்கப்பட்ட முறைமையொன்றையும் அந்தந்த மாவட்டங்களுக்கென  எல்லை நிர்ணய ஆணைக்குழு தயாரித்திருக்கின்றது.

இம்முறைமையின் கீழ்  சனத்தொகை அடர்த்தி, நிலத்தோற்ற இயல்பு, கடல் மட்டத்திலிருந்தான உயரம், உட்பிரவேசப் பாதைகளின் தற்போதைய நிலைமை ஆகிய விடயங்களைக் கருத்திலெடுத்து, நாட்டின் 25 மாவட்டங்களையும் பரந்தளவில் 10 வகைகளுக்கு வகையீடு செய்ய முடியும். அதற்கமைய, ஒவ்வொரு வகைக்கும் பொருத்தமான கிராம அலுவலர் பிரிவொன்றின் பரப்பளவு எவ்வளவென்பதை நிர்ணயிப்பதற்கான பொருத்தமான அடிப்படையொன்று உருவாக்கப்படும்.

அதற்கமைய ஒரு சதுர கிலோமீட்டருக்கான சனத்தொகை  அடர்த்தி 1500 லும் பார்க்க அதிகமாகக் காணப்படுகின்ற வகையீட்டில் உள்ளடக்கப்படுவது, சமதரையைக் கொண்டனவும் வீடுகளுக்கான பிரவேசப் பாதைகள் காணப்படுகின்றனவுமான கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் மாத்திரமேயாகும். ஏனைய 23 மாவட்டங்களிலும்  ஒரு சதுர கிலோ மீட்டருக்கான சனத்தொகை அடர்த்தி 800 லும் குறைவானதாகும். அவற்றில் 7 மாவட்டங்களில் (காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை மற்றும் நுவரெலியா என்பன) ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 400 க்கும் 800 க்கும் இடைப்பட்ட எண்ணிக்கையினர் வதிவதோடு,  அவற்றின் நிலப்பரப்பு ஒன்றிற்கொன்று மாறுபட்டதாகும். காலி, யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறை  என்பன ஒப்பீட்டு ரீதியாக சமதரை அமைப்பையும் இலகுவான பிரவேச வழிகளையும் கொண்டவையாக

இருப்பதோடு, களுத்துறை, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா மாவட்டங்கள் மலைப்பாங்கான பிரதேசங்களையும் சிரமமான பிரவேச பாதைகளையும் கொண்டனவாகும், ஆதலால் உத்தேச வகையீட்டின் கீழ் இந்த 7 மாவட்டங்களும் தெளிவான 4 வகைகளுக்கு பிரிபடுகின்றன.

இன்னும் 11 மாவட்டங்களின் (அம்பாறை, அநுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, குருணாகலை, மாத்தளை, பொலன்னறுவை, புத்தளம், இரத்தினபுரி மற்றும் திருக்கோணமலை) சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 100 க்கும் 400 க்கும் இடைப்பட்டதாக அமைவதோடு, பிரவேச வழிகள் சிரமமானவையாகக் காணப்பட்ட போதிலும், அவற்றின் தரையமைப்பு ஒன்றிற்கொன்று வேறுபட்டதாகும். மட்டக்களப்பு, புத்தளம் மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் சமதரை அமைப்பைக் கொண்டனவாக விளங்குவதோடு, அம்பாறை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்கள் ஓரளவு மலைப்பாங்கான பிரதேசங்களைக் கொண்டிருக்கும் அதேவேளை, பதுளை, மாத்தளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்கள் அதி கூடுதலான மலைப்பாங்கான பிரதேசங்களைக் கொண்டமைந்துள்ளன. ஆதலால் உத்தேச இந்த 11 மாவட்டங்களும் 3 வகைகளாகப் பிரிக்கப்படல் வேண்டும்,

எஞ்சியுள்ள 5 மாவட்டங்களும் கூடுதலான காடடர்த்தி கொண்டவாக விளங்குவதோடு, பிரவேச வழிகளும் சிரமமானவையாகும். சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 100 லும் குறைவாகும். மொனராகலை மாவட்டம் மலைப்பாங்கான பிரதேசங்களை உள்ளடக்கியிருப்பதோடு, கிளிநொச்சி, மன்னார் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்கள் சமதரை கொண்ட மாவட்டங்களாக விளங்குகின்றன. இந்த 5 மாவட்டங்களையும் 2 வகைகளாகப் பிரிக்க முடியும். இதில் மொனராகலை மாவட்டம் ஒரு வகையைச் சார்ந்ததாகும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தற்போது காணப்படுகின்ற கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கையை உத்தேச முறைமையில் காணப்படுகின்ற உயர்ந்த மற்றும் குறைந்த மட்டுப்பாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, 15 மாவட்டங்களின் கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை முறையான இடைவெளியில் அமைந்திருப்பதை அவதானிக்க முடியும். ஏனைய 10 மாவட்டங்களில் இலகுவான பிரவேச வழிகள் காணப்படுவதோடு, அவற்றிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை மிக அதிகமாகும். உயர் வினைத்திறனை ஏற்படுத்துவதற்காக இந்த 10 மாவட்டங்களின் கிராம அலுவலர் பிரிவுகள் பலவற்றின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். மேலும் கிராம அலுவலர் பிரிவுகளில் பல, மக்கள் தொகை மற்றும் நிலப்பரப்பு என்பவற்றில் உத்தேச எண்ணிக்கை மற்றும் அளவினைத் தாண்டியனவாகக் காணப்படுகின்றன. 25 மாவட்டங்களிலும் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் 838 கிராம அலுவலர் பிரிவுகளின் சனத்தொகை உயர் மட்ட எல்லையைத் தாண்டியிருப்பதோடு, 20 மாவட்டங்களில் உள்ள 253 கிராம அலுவலர் பிரிவுகள் உத்தேச நிலப்பரப்பு மட்டுப்பாட்டைத் தாண்டியவையாயுள்ளன. 8 மாவட்டங்களில் உள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளின சனத்தொகை மற்றும் நிலப்பரப்பு ஆகிய இரண்டும் மட்டுப்பாட்டைத் தாண்டியனயனவாகவுள்ளன. இக் கிராம அலுவலர் பிரிவுகளை வெவ்வேறாகப் பிரித்து அவ்வாறு பிரிக்கப்பட்ட பகுதிகளை அதற்கு அடுத்ததாக அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவுகளுடன் இணைத்து, அந்தந்த மாவட்டங்களின் உத்தேச சனத்தொகைப் பரம்பல் மற்றும் நிலப்பரப்புக்கு ஏற்றாற்போல் புதிய கிராம அலுவலர் பிரிவுகளை உருவாக்குதல் வேண்டும்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட இம்முறைக்கமைய. அந்தந்த மாவட்டங்களில் வினைத்திறன் மிக்க வகையில் முகாமைத்துவம் செய்ய முடிந்த கிராம அலுவலர் பிரிவுகளுக்காக இனங்காணப்பட்ட சனத்தொகைப் பரம்பலுக்கும் நிலத்தோற்ற அமைப்புக்குமேற்றவாறு நிகழ்கால கிராம அலுவலர் பிரிவு முறையை அடிப்படையான

பொருத்தப்பாடுகளுடன் கூடியதாக மாற்ற  முடியுமென இதன் சுருக்கப் பொழிப்பாக எடுத்துக் கூற முடியும். நாட்டின் நிருவாகத்திலும் சேவை வழங்களிலும் உயர் வினைத்திறனை ஈட்டிக் கொள்ளும் பொருட்டான ஓர் ஆரம்பப் படியாக  இம்முறையை கொள்கை வகுப்பாளர்கள் கலந்தாய்ந்து அங்கீகரித்து செயல்படுத்துவார்களாயின், எதிர்காலத்தில்  இவற்றில் தேவையான மாற்றங்கள் மற்றும் விருத்திகளை மேற்கொண்டு  சந்தர்ப்பத்திற்கேற்றவாறு திருத்தியமைக்க  முடியும்.